# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## GGY 3.11 – WATER POLLUTION AND MANAGEMENT

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) உலகின் நீர்ச் சமநிலையின் அளவுசார் மதிப்பீட்டை தருவதுடன் அதனைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) நீர்ப்பாசன நடவடிக்கைகளை அதிகரிப்படையச் செய்வதற்கு "நீர்ச்சமநிலையின் அவசியம் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. விளக்குக.

(10 புள்ளிகள்)

02. அ) இயற்கையான நீர் வளம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

(02 புள்ளிகள்)

ஆ) நீர் வளத்தினை மாசடையச் செய்யும் காரணிகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

இ) இம்மாசடைவின் காரணமாக ஏற்படும் சௌக்கிய பிரச்சினைகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

(12 புள்ளிகள்)

03. அ) நீரியல் சுற்றோட்டம் என்றால் என்ன?

(02 புள்ளிகள்)

ஆ) நீரியல் வட்டச் செயற்பாடுகளில் காணப்படும் இடைமறித்தல் செயற்பாட்டினை விளக்குக.

(08 புள்ளிகள்)

இ) மேலே கூறப்பட்ட செயற்பாடுகளில் காணப்படும் கழுவு நீரோட்டம், ஊடுருவல் இச்செயற்பாடுகளுக்கு இடையிலான நேரெதிர் தொடர்புகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

04. அ) மேலதிக நீர்ப்பாசன நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் சூழலியல் பிரச்சின்னைகளை சுருக்கமாகத் தருக.

(05 புள்ளிகள்)

ஆ) குறைவான நீர்ப்பாசன நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் சூழலியல் பிரச்சினைகளைச் சுருக்கமாத் தருக.

(05 புள்ளிகள்)

இ) விவசாய நீர்ப்பாசன நடவடிக்கைகளில் தரைநீரைப் பயன்படுத்துவதற்கான உள்ளார்த்தங்களை மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)